1995 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே மணிமண்டபம் கட்டுகின்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டதற்கிணங்க அவர் பிறந்த ஊரான காங்கேயநல்லூரில் மணிமண்டபம் கட்டப்பட இருக்கிறது. அதற்கானஇடம் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறது. அந்த இடம் கையகப்படுத்தப்பட்டதற்குப் பிறகு பொதுப்பணித் துறையிடம் மதிப்பீடு பெற்று மணிமண்டபம் கட்டுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். சென்னையிலே சிந்தாதரிப்பேட்டையிலே அவர் வாழ்ந்த பகுதிக்கு அவருடைய பெயர் வைக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சரோடு கலந்தாலோசனை செய்து அதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 477 டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

477—

டாக்டர் அம்பேத்கார் சிலை அமைத்தல்

***78859*—டாக்டர் ஜெ. பரந்தாமன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள டாக்டர் அம்பேத்கார் சிலை விரைவில் வெண்கல சிலையாக மாற்றப்படுமா?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வடாற்காடு-அம்பேத்கார் மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலக வளாகத்தில் நிறுவப்பட்டிருக்கிற டாக்டர் அம்பேத்காருடைய சிலை வெண்கலத்தால் செய்யப்பட்டது. ஆகவே அதை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு-அம்பேத்கார் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் சிலை நிறுவ டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் திட்டமிடப்பட்டு நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டன.

ஆனால் அதைத் திறந்தது தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் என்பதைப் போல வேறு சிலர். கம்பீரமாக டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் வடிவமைக்கப்பட்ட கட்டடத்திற்கு முன்னால் எளிமையாக திரு. கிருஷ்ணன் என்கிற நல்லவர் ஒருவரால் நன்கொடையாகப் பெறப்பட்ட அந்த டாக்டர் அம்பேத்கார் சிலை வைக்கப்பட்டது. அதைத் திறந்து வைத்தது தாழ்த்தப்பட்ட மக்களிடம் இரட்டை வேடம் போடும் இன்றும் இரட்டை வேடம் போட்டுக்கொண்டிருக்கின்ற ஒருவர். அந்த சிலை வெண்கலச் சிலை அல்ல என்ற மர்மமும் ஐயப்பாடும் இருக்கிறது. கட்டடத்திற்கும் அதைத் திறந்தவருக்கும் சம்பந்தம் இல்லை. அங்கே திறக்கப்பட்ட சிலையும் நன்கொடையாக வந்த சிலை. அடுத்தவன் வீட்டு நெய்யே என்பதைபோல் பெயர் மட்டும் ஒருவருக்கு இருப்பதா என்று அம்பேத்கார் மாவட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் கேட்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: தாழ்த்தப்பட்ட மக்கள் மீது டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திடீரென்று பாசம் கொண்டவர் அல்ல. படிப்படியாக, ஆண்டுக்காண்டு சென்னையில் டாக்டர் அம்பேத்காருக்கு ஒரு மண்டபம், டாக்டர் அம்பேத்காருக்கு சிலை, டாக்டர் அம்பேத்கார் பெயரில் போக்குவரத்துக் கழகம், தந்தை சிவராஜ்க்கு சிலை, என்று தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேறுவதற்கான முன்னோடித் திட்டங்களை, டாக்டர் அம்பேத்கார் கனவை நனவாக்கும் ஒரே தலைவியாக, தர்மம் மறுபடியும் வெல்லும் என்று நிருபிக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் அம்பேத்கார் சிலையைத் திறக்கத் தகுதியுள்ள ஒரே தலைவி புரட்சித் தலைவி என்பதால் அது கம்பீரமாக மாற்றியமைக்கப்படுமா? மேலும் திறந்த வெளிச் சிலையாக இருப்பதால் சிலைக்கு மேல் சிறிய மண்டபம் கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நிறுவப்பட்ட சிலை வெண்கலச் சிலை. டாக்டர் அம்பேத்காருடைய திருவுருவச் சிலை *1,39,000* ரூபாய் செலவில் அங்கே நிறுவப்பட்டிருக்கிறது. அந்தச் சிலையிலே கூட மோசடி இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி இருக்குமேயானால் அதுகுறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கம்பீரமாக அம்பேத்காருக்கு சிலை வைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். இதயதெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கும் கம்பீரமான சிலை சென்னையில் அற்புதமான இடத்தில் நிறுவி

இருக்கிறார்கள் என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல. ஆதிதிராவிட மக்களுக்காகப் பணியாற்றுகிற ஒரு சமூகத் தொண்டருக்கு டாக்டர் அம்பேத்கார் பெயரிலே ஒரு இலட்சம் ரூபாயிலே ஒரு விருது வழங்குவதற்கும் புரட்சித்தலைவி உத்தரவிட்டு இருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதே இல்லையே என்பதற்கேற்ப துணிவாக, நேர்மையாக, பாரதி கண்ட புதுமை தெய்வமாக விளங்குகிறார் டாக்டர் புரட்சித் தலைவி. தங்களுக்கு ஆட்சி கிடைத்தவுடன் தொகுதியை மறந்து தலைநகரிலேயே தஞ்சம் அடைந்துவிடுகிற அரசியல் வாதிகளுக்கிடையில், சொந்த தொகுதியைச் சார்ந்த ஆதிதிராவிட மக்களை தன் சொந்தச் செலவில் சென்னைக்கு தனிப்பேருந்தில் ராஜ மரியாதையோடு வரவழைத்து விருந்து வைக்கப்பட்டது என்பதைப் பார்க்கிற போது டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் மட்டுமே அது முடியும் என்பதால் தான் கவிஞர் தாகூர் அன்றே பாடிவிட்டார் என்று தாழ்த்தப்பட்ட மக்கள் பாராட்டுகிறார்கள். நன்றி சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு-அம்பேத்கார் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் டாக்டர் அம்பேத்கார் சிலை வைக்கப்பட்டுள்ள இடத்தில் நிறைய இடம் இருப்பதால், அது பயன்படுத்தப்படாமல் இருப்பதால் சென்னை காந்தி மண்டபத்தைப் போல அரசு நிதிநிலைக்கேற்ப மண்டபம் அல்லது நினைவுச் சின்னம் அங்கே அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு.செ.கு. தமிழரசன்.

திரு. செ.கு.தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பேத்கார் மாவட்டத் தலைநகரான வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்திலே திறக்கப்பட்ட சிலை டாக்டர் அம்பேத்காரின் உருவ ஒற்றுமைக்கு நேர்மாறாக இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் கூட அதை மாற்றியமைக்கலாம் என்கிற ஒரு பரிந்துரையை அரசுக்கு அனுப்பி

இருக்கிறார். எனவே அதை மாற்றுவதற்கு அரசு முன் வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பேத்கார் சிலையின் தோற்றத்தைப் பற்றிச் சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலையிலே அந்தச் சிலை இருக்குமேயானால் அதை மாற்றம் செய்வதற்குத் தகுந்த நடவடிக்கையை அரசு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 478. திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

478—

கீரனூரில் பேருந்து நிலையம் கட்டுதல்

***25311**—திரு. சி. குழந்தைவேலு:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

குளத்தூர் தொகுதி, கீரனூரில் பேருந்து நிலையம் எப்பொழுது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய கருத்துரு மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கிடைக்கப்பெற்று நகர் ஊரமைப்பு இயக்குநரால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதும், பேருந்து நிலையம் கட்டும் பணி துவக்கப்படும்.

முற்பகல் 11.20

திரு. சி. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான குளத்தூர் தொகுதியினுடைய தலைமையிடமாக கீரனூர் இருந்து வருகிறது. கீரனூர் மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை பேருந்து நிலையம் கட்டவேண்டும் என்பதாகும். பேருந்து நிலையம் இல்லாததால், அங்குள்ள பொதுமக்கள், வெயிலிலும் மழையிலும், கஷ்டப்பட வேண்டிய சூழ்நிலை உள்ளது. பேருந்து நிலையக் கட்டிடம் கட்டும் திட்டப்பணி நீண்ட நாட்களுக்கு முன் சேங்ஷன் ஆகியும் நிலுவையில் உள்ளதாகத் தெரியவருகிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பணியை துரிதப்படுத்தி விரைவில் கட்டிடம் கட்ட ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.